**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் வியாழன் கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திரு.G.வீராங்கன், கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 60/2018** வா.சா. 2 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | இந்திராணி | **வயது** | : | 75 |
| **க.பெ** | : | நடேசன் | **தாலுக்கா** | : | கலசப்பாக்கம் |
| **கிராமம்** | : | மேல்சோழங்குப்பம் | **தொழில்** | : | விவசாயம் |

**<u>05.03.2026 – வா.சா. 2 குறுக்கு விசாரணை</u>**

1)நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த நீதிமன்றத்தில் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். கோவிந்தசாமி அவர்கள் என்னுடைய தந்தை ஆவார். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி பச்சையம்மாள் யார் என்றால் என்னுடைய தாய் ஆவார். என்னுடன் பிறந்தவர்கள் ரேணு,(2 ம் பிரதிவாதி), பேபி (3 ம் பிரதிவாதி), ருக்மணி (2 ம் வாதி) ஆவர். போளூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட ஆவண எண் 2745/1953 (வா.சா.ஆ-1) தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சொத்தில் பாகம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2)மேற்படி வா.சா.ஆ-1 ஆவணம் என்னுடைய தாத்தா பெருமாள் அவர்கள் என் தந்தைக்கும், என் சித்தப்பா வீராசாமிக்கும் எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். என் தந்தையும், என் சித்தப்பா வீராசாமியும் மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை பத்திரத்தின் மூலமாக பிரித்துகொள்ளவில்லை என்றால் இல்லை, வாய்மொழியாகத்தான் பிரித்துகொண்டார்கள். பெருமாளுக்கு 2 மனைவிகள், அதில் 1 ம் மனைவி சின்னகுழந்தை யின் மகன்கள் தான் கோவிந்தசாமி கவுண்டர், வீராசாமி கவுண்டர் என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்தில் பெருமாளுக்கே பாகம் எதுவும் குறிப்பிட்டு இல்லை, 4 ல் 1 பாகம் தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

3)இந்த வழக்கில் வீராசாமி மற்றும் அவரின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே நெம்பர்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ-1 ஆவணத்தின் படி சர்வே நெம்பர் 197/2 ல் 47 ½ செண்டிற்கு உள்ளது, ஆனால் என்னுடைய வழக்கின் 1ம் அயிட்ட சர்வே நெம்பர் 197/2 பி 20 செண்டை தான் காண்பித்துள்ளேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேலும், வா.சா.ஆ-1 சர்வே நெம்பர் 341, 205, 233 உள்ளது நான் என் வழக்கில் காண்பிக்கவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வீராசாமியின் வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள், அவர்கள் மகள் கமலா, காலமான மகள் கண்மணி

அவர்களுக்கு 1 மகன் உள்ளார், வீராசாமியின் மகன் சுப்பிரமணி உள்ளார்கள். வீராசாமியின் வாரிசுகளை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

4)4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியை ஏமாற்றி தானசெட்டில்மெண்ட் எழுத போகிறார்கள் என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளது சரியா என்றால் சரிதான். நான் சொல்வதெல்லாம் தவறு, 1ம் பிரதிவாதி தாவாசொத்து உள்பட ஒரு சில சொத்துக்களான சர்வே நெம்பர் 197/2 பி 49 செண்ட், சர்வே நெம்பர் 198/1 51 செண்ட், சர்வே நெம்பர் 192/2 பி1 5 செண்டும், சர்வே எண் 203/2 சி1 பி-ல் 28 செண்டும், சர்வே நெம்பர் 199/2 பி2-ல் 4 செண்ட் ஆகிய சொத்துக்களை 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளுக்கு 19.11.2010 ல் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் அனைத்தும் பிரதிவாதிகள் 3 முதல் 5 பிரதிவாதிகள் அனுபவித்துவருகிறார்கள் என்றால் சரிதான்.

5) வா.சா.ஆ-1 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் முன்னிலைக்கு நான் பாகபிரிவினை வழ்கku தாக்கல் செய்துள்ளேன், மேற்படி வா.சா.ஆ-1 ல் உள்ள குறிப்பிட்டுள்ள சொத்துக்களை நான் பாகபிரிவினை வழக்கில் முழுமையாக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வீராசாமியின் வாரிசுகளை இணைத்திருக்க வேண்டும், இணைக்காமல் தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.03.09 10:27:44 +0530

District Munsif,
Polur.